# கார்மேகக் கோனார் கட்டுரைகள்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

கையைச் செப்பனிட்டுக் கவினுறுத்தும் புலவனைத்தான் கவிஞருலகிலே தெய்வக் கூறு படைத்தவராகப் பாராட்டுகின்றோம்.

நாட்டில் பக்தி குலவி மற்றையதெல்லாம் நல்நிலையுற்றிருந்த காலத்தில் தோன்றி, இராமகாதையால் பக்திப் பயிரை வளர்த்த கம்ப நாடனை, 'கவிச் சக்கரவர்த்தி' என அக்காலத்தினர் போற்றினர்.

யாவும் நிலை குலைந்து அடிமை மோகம் பூண்டு, "நாம் இருக்கும் நாடு நமது; அது நமக்கே உரியது" என்று காணும் உணர்ச்சியும் அற்று, மக்கள் எல்லாம் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடர்களைப் போலப் பதவி கெட்டு, நெஞ்சிலுரமுமின்றி கோழைகளாய் வாழுங் காலத்தில் வீர உணர்ச்சியுடன் தட்டி எழுப்பி சுதந்திரத்துவசம் துளங்கும் நாட்டில் இருத்தல் ஒன்றுமே மக்களின் வாழ் வறிகுறி என உணரும் வண்ணம் தனது நாவன்மையால் நெஞ்சையள்ளும் அருங்கவிகள் பல இயற்றித் தந்திட்ட புண்ணியப் புலவன் பாரதியை, இன்றைய மக்கள் கவிச் சக்ரவர்த்தி என்று கொண்டாடுகின்றனர். தமிழகத்தில் பண்டிதர் மட்டும் அன்றிப் பாமரர்களும் கூடி மகிழ்ந்து, தமிழ்ப் புலவர் ஒருவரது வாழ்க்கையையும் குறிக்கோளையும் பெரிதெனப் பாராட்டி, திருநாள் கொண்டாடும் பாக்கியம் பெற்றருள் இன்று தலைசிறந்து நிற்பவர் கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் ஒருவரே ஆவர்.

எனினும், இவர் புகழ் விரும்பாப் பண்டிதர்களும் இல்லாமல் இல்லை. 'புலமைக்காய்ச்சல்' என்பது புலவர்களை இன்று நேற்றுத் தோன்றிப் பற்றி வருவதொன்றன்று. பன்னெடு நாட்களாகவே புலவருலகைப் பிடித்து வருவதொரு பீடை அது. நேற்று வரை 'பாரதியார் மகா கவிதான்; உலக கவி அல்லர்' என்றாற் போன்ற வாதப் பிரதிவாதங்கள் பத்திரிகைகளில் நிகழ்ந்து வந்திருக்கின்றன. சங்கீதக் கலை, உத்தம சங்கீத இலக்கணம் இன்னதென்று பற்றிக் கூறும்' இடத்து' 'இன்னின்ன இராகங்கள் இப்படி இருக்க வேண்டும்' என்று ஒருவாறு விதி கூறி அதன்மேல் கேட்பவரைப் பரவசமடையச் செய்து தன் பாற் பணியச் செய்வது எதுவோ அதுவே உத்தம சங்கீதம் என்று கூறிச் செல்லுகிறது. அஃதொப்ப, படிப்பவருக்கு உள்ளடங்கிக் கிடக்கும் உணர்ச்சியை எழுப்பிப் பாடியவாய் தேனூறும்படி நெஞ்சை அள்ளும் கவி பாடிப் பரவசமடையச் செய்திட்டு நிற்கும் பாரதி உலககவிதான்; உத்தம கவியும்தான். இதுபற்றி வாதம் வேண்டாம். வாதமும்

தருக்கமும் தான்பிடித்தது சாதித்து நிற்க விரும்புவார்க்கன்றி உண்மை நிலே அரிய விரும்புவோர்க்கு உதவுவன ஆகா.

எந்நாட்டு மொழியினும் தனது வாழ்நாட் காலத்திலேயே போதிய பாராட்டுப் பெற்ற புலவர் இருந்து சென்றதாக நாம் சரிதமூலம் கேட்டறிவதில்லே. இதன் காரணம்தான் என்ன? குணமே முழுதுடையாரும் குற்றமே முழுதுடையாரும் இருப்பது இயல்பன்று. வள்ளுவனாரும் 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்' என்று குற்றம் நீக்கிக் குணம் கொள்ளுமாறே தனது முப்பாலில் ஆணையிட்டுச் சென்றிருக்கிறார். சமகாலத்திலுள்ளார், தமது ஜீவிய காலத்திலே தமமோடொத்த புலவன் ஒருவன் பாராட்டப்படுவதை நோக்கும் போது பொறாமை கொள்ளுவதே பெரும்பாலும் இயல்பு; அத்தகையார் ஒரு சில குற்றங்களேயே மிகைப் படுத்திக் கூறிப் புகழை மாசுபடுத்தத் தம்மால் இயன்றன தாம் செய்வர். இன்னும், ஒரு மனிதன் வாழ்க்கை, பொது வாழ்க்கை, தனி வாழ்க்கை என இருதிறப்படும். சில நாடுகளில் இவ்விரண்டினேயும் இணைத்துச் சீர் தூக்குவது கிடையாது. தனிப்பட்ட வாழ்க்கை முறையில் எத்தகைய சீர்கேடுடையனுயினும் சிறந்த பொது நல வாழ்க்கை மேற்கொண்டிருப்பானேயானல், அவ்வளவிற்கு அவன் பொது மக்களால் பராட்டபடுவன்; இது மேலேத் தேயங்களின் இயல்பு. நம் நாட்டியல்பு முற்றிலும் மாறுபட்டது. தனிப்பட்ட வாழ்க்கை நெறியில் ஒருவன் ஒழுக்கக் கேடுடையனுய் இருப்பனுனல், அதனேப் பொது வாழ்வினும் ஏற்றிப் புகழ் விரும்பாத பலர் அவனேப் பீடழிப்பர். இப்படிப் புகழழிந்து நிற்பார் இன்றும் பலருண்டு. எனவே ஒருவரின் வாழ்நாளின் பின்புதான் அவரது நூல் கருவியாக மட்டும் சீரிய கொள்கை ஆராயப்பட்டுப் புகழ்ப் படுதல் கூடும். இப்படிபட்ட நிகழ்ச்சிகளில் சிக்கி நம் பாரதியாரும தம் ஜீவிய காலத்தில் சிலபெரும் பண்டிதர்களால் அநாதரிக்கப்பட்டிருந்தும், இன்று உண்மை நாடும் உத்தம புருஷர்களால் விரும்பிப் போற்றப்பட்டு வெளிநாடுகளிலும்கூட புகழ்வீசி மணம் அடையப் பெற்றிருக்கிறுர்.

எளிய நடையோடு சிறிய பதச் சேர்க்கை; இனிய உவமை, பல்வேறு சந்தம் முதலியன உடையவாய், ஓராண்டு தமிழ்ப் பழக்க முள்ள பெண்டிரும் உணரும் தன்மை வாய்ந்த கவியமைப் புடன், காவியங்களுக்குள்ள நயங்களும் குறைவுருதபடி பாடிய சிறப்புரிமை இவரிடம் மட்டும் நாம் மெய்யாகக் காண்பதொன்று. இவையுடைமையே இன்று அவர் எல்லாராலும் உச்சிமேற் கொண்டு மெச்சப்படுவதற்கு உரிய காரணங்கள்; உண்மை இவ்

வாறிருக்க இதை மறுத்து, "பாரதி நூல்கள் யாப்பிலக்கண நெறி பிறழ்ந்து பண்டிதர் நூல் நடையைத் துரந்து, பாமரராகிய இழி சனரே வதிக்கும் பெற்றி வாய்ந்துள்ளன; இவையெல்லாம், கம்பன், வள்ளுவன், புகழேந்தி முதலானோர் நூல்களுடன் எதிரிடும் தன்மையவாமே?" என்றாற் போன்ற சில போலித் கடைகளை நிகழ்த்தி, அவ்வளவில் தன கோள் நிறுவியதாகக் கனவு கண்டு மகிழ்வாரும் சிலர் உளர். இதனிடத்து உண்மை ஒரு சிறிது மின்றி ஒழியினும், அதனையும் ஒருவாறு தீர விசாரித்து முடிவு காண வேண்டியது நமது பெருங் கடமையாகும்.

உலகம் மெச்சக் கவி புனைந்து, கம்பநாடாருக்குப் பின் பிறிதொருவரும் பெற்றறியாத 'கவிச்சக்கரவர்த்தி'ப் பட்டம் பெற்ற பெரும் புலவர், யாப்பிலக்கண நெறிக்குட்பட்டு நூலியற்றும் ஆற்றல் அற்றவராவாரா? அப்படியும் இரண்டொரு நேரிய நூல்களைப் பாடியிருக்கக் கண்டு வைத்தும் அவ்வாறு திறமை அற்றார் எனக்கருதுவது அறிவுடைமையாகுமா?' 'என்றன் பாட்டுத்திறத்தாலே உலகைப் பாலித்திடல் வேண்டும்' என்று உலகையே தன் எளிய பாடல்களால் அடிமை கொள்ள விரும்பி, அதற்கென அல்லும் பகலும் அருவரதமும் அன்னை பராசக்தியின் அருளை வேண்டி அகங் குழைந்து நின்ற அவர்க்கு அவ்வருள் கிட்டாமற் போயிற்றா? பின், ஏன் அவர் பண்டிதர் விரும்பிப் போற்றும் நடையில் இரண்டொரு நூல்கள் தாமும் இயற்றி ஏனைய பிறவற்றையும் வேறுபடப் பாடி அமைத்தார்? அதற்குதகுந்த காரணமும் இல்லாமலா ஒழியும்? இவற்றை யெல்லாம் தீர விசாரியாமல் குறை கூற முற்படுவது பேதமையின்பாற் பட்டதன்றோ?

---

## மதுரைக்காஞ்சி
## இதுபற்றிய விரிந்த கட்டுரையின் சிற்சில பகுதிகள்

**By A. KARMEGA KONAR,**

**Lecturer in Tamil, American College, Madura.**

மதுரைக்காஞ்சி என்பது சங்க இலக்கியமாகிய பத்துப் பாட்டில் ஆறாவதாக அமைந்து இருக்கும் பாட்டாகும். மதுரையினிடத்து அரசனுக்குக் கூறிய காஞ்சி எனப் பொருள்விரிப்பர். காஞ்சித்திணை யென்பது வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் கூறும் குறிப்பினையுடைய ஒரு புறத்திணையாம்.




Rajamantrapravina K. V. Anantharaman, B.A.,



Rajasevaprasaktha A. V. Ramanathan, B.A.,

By Courtesy of Tai Nadu.




Rajakaryapravina N. S. Subba Rao, M.A., (Cantab)
Bar-at-Law.




Mr. E. G. Mcalpine, M.A., J.P.,

By Courtesy of Tai Nadu.

இப்பாட்டுக்குத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். பத்துப் பாட்டிலுள்ள நெடுநல் வாடை யென்னும் பாட்டும் இப்பாண்டியன் மீது இயற்றப் பட்டதேயாகும். இவன் சிறந்த வீரன் புலமையிற் சிறந்தோன் இவன் இளம் பருவத்தே அரசு கட்டிலேறி திறம்பெற அரசியலோச்சியவன்; இவன் மீது அழுக்காறு கொண்ட சேரனும் சோழனும் எழுவர் சிற்றசர்களுடனும் நால்வகைப் படையுடனும் வந்து மதுரை மூதூரை முற்றுகை யிட்டனர் இதனை அறிந்த நெடுஞ்செழியன் சிறியன் இவன் என உளையக் கூறிச் சிறு சொல் சொல்லிய சினங்கெழுவேந்தரைச்சமரில் சிதையத்தாக்கி அவர்களது வெற்றி முரசத்தோடு அவர்களையும் சிறைப் படுத்தாவிடின் என் குடை நிழலில் வாழும் சென்று தங்கும் குடிகள் வேறு நிழல் காணாது கொடியன் எம் இறை என்று கண்ணீர் விட்டுப் பழி தூற்றுங் கொடுங் கோலனாக யான் மாங்குடி மருதனார் முதலிய நல்லிசைப் புலவர்கள் என்னைப் பாடாமல் என் நாட்டை விட்ட கல்வார்களாக, யாசகர்களுக்கு ஈயமுடியாத வறுமை என்னைச் சூழ்வதாக என்று உக்கிரத்துடன் சபதங்கூறிப் போர்க்களம் சென்று அவ்வெழுவரோடு அசகாய சூரனாக நின்று, போரில் பகைவரை வென்று சூளுற்றவாறே சேரனைச் சிறைப்படுத்தி மீண்டவன். இவ்வெழுவரோடும் நிகழ்ந்த போர் பல திங்கள்வரை தொடர்ந்து நடைபெற்றது. அக்காலமுதலாகவே இவ்வரசன் பல் போர்களில் ஈடுபட்டுப் பகைவர்மேற் செல்லுதலிலும் பகைவர் நாட்டைப் பாழாக்கி அவர்களைக் கொன்று மறக்கள வேள்வி செய்தலிலுமே தன் வாழ் நாளில் பெரும் பகுதியைக் கழித்துவிட்டான். இதனை யுணர்ந்த இவனது அவைக்களத்துப் புலவர் பெருமானாகிய மருதனார் இவனுக்கு இவ்வுலக வாழ்க்கையில் உவர்ப்பும் மோக்ஷ சாதனங்களாகிய நற்கருமங்களைச் செய்வதில் விருப்பும் உண்டாக்கக்கருதி இவன் மீது இப்பாட்டைப் பாடலானார்.

காஞ்சித்திணையை அறிவுறுத்தக் கருதிய ஆசிரியர் போர் வென்றியிலேயே ஆழ்ந்து கிடக்கும் அரசனுக்கு முதற் கண்ணே தம் கருத்தைப் புலப்படுத்த முற்படாது இவனது முன்னோர்கள் நாடு செழிக்க, மக்கள் பசியும் பிணியுமின்றி, வசியும் வளனும் சிறக்க அறநெறி பிறழாது உலக மாண்டதைக் குறிப்பிட்டு அத்தகையோர் வழியில் உதித்தவனே என்று அழைத்து அவனது முன்னோரது சிறந்த இயல்புகளை ஞாபகப் படுத்தி, நீயும் அவர்களது அடிச்சுவடு பற்றி நடக்க வேண்டாவோ என் பதனைக் குறிப்பாகப் புலபடுத்துகிறார்.

பின்னர் ஆசிரியர் அரசனை நோக்கி நீ அரசர் எய்தவேண்டிய இம்மைக்குரியவென்றிச் செல்வங்கள் அனைத்தையும் அடைந்து

விட்டாய். இனி மறுமைக்குரிய அறநெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டுவது அவசியமானதன்றே? என்பதனை உணர்த்த வேண்டிப் பாண்டியன் நெடுஞ்செழியன் பகைவர் நாட்டின் மீது படை எடுத்துச் சென்று அவர்களது அரண்களையும் காவல் மரங்களையும் அழித்ததையும் தன் ஏவல் கேட்டு ஒழுகாத பகைவரது நாடுகளைப் பாழாக்கிய முறைகளையும் தலையாலங்கானம் என்னும் ஊரில் நடந்த போரில் சேரசோழர்களையும் ஐம்பெருவேளிர்களையும் வென்ற செய்தியையும், சாலியூர், முதுவெள்ளிலை முதலிய ஊர்களைக் கைப்பற்றியதையும் பரதவரைவணக்கியதையும் பகைவர்களிடம் இருந்து பெற்ற பொருள்களைத் தனக்கென வைத்துக் கொள்ளாது நட்பரசர்கட்கும் புலவர்கட்கும் பாணர்கட்கும் வழங்கிய வண்மையையும் பிறருக்குத் தலைவணங்காப் பெரு விறலையும் அவனது மூதறிவையும், பொய்தவிர்ந்து வாய்மையே பேசும் பொற்பினையும் கற்போர் உள்ளம் களிகூர அழகாக எடுத்தியம்புகின்றார்.

இவ்வாறு இப்பாட்டில் 205-ஆம் அடிவரை, பாண்டியனது பலதிறப்பட்ட பண்பினையும் அருஞ் செயல்களையும் பாராட்டிக் கூறிய ஆசிரியர் 206-முதல் 209-வரையுள்ள நான்கடிகளாலும் 234-முதல் 237-வரையுள்ள நான்கடிகளாலும் வீடு பேறாகிய நிமித்தத்தையும் பல்வேறு பொருள்களின் நிலையாமையையும் சுருக்கமாகப் புலப்படுத்தியுள்ளார் அவ்வடிகள் கீழ் வருவனவாம்:-

(205) அன்னாய் நின்னொடு முன்னிலை யெவனோ
கொன்னொன்று கிளக்குவல் அடுபோரண்ணல்
கேட்டி சின்வாழி கெடுகநின் அவலம்

(208) கெடாத நிலை இயர் நின்சேண் விளங்குநல் லிசை.

(234) பணைகெழு பெருந்திறற் பல் வேல் மன்னர்
கரைபொரு திரங்குங் கனையிருமுந் நீர்த்
திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை யுலகம் ஆண்டு கழிந்தோரே

இப்பகுதியின் பொருள்களவான:-

அரசே அத்தகைய நின்னோவான் மாவோடு, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாலும் நுகரப் படும் அவை ஒளி, ஊறு, ஓசை, வாசனை, என்னும் பொருள்கட்கு என்ன உறவுண்டு, உன்னிடத்துண்டான மாயை கெடுவதாக போர்த் தொழிலில் வல்லவனே, எல்லாவற்றிலும் பெரிதாயிருப்பதொரு

பரம்பொருளைக் கூறுவேன்: அதனை என்னாற் காட்டுதல் அரிது அதனைத் தொல்லாணை (சபா அநுக்கிரமுடைய) நல்லாசிரியர்பால் கேட்டுணர்வாயாக.

வெற்றி முரசத்தின் விறலும் வேற்படையின் திறலும் படைத்துத் தம் உரை, தரையெலாம் பரவ, உலகம் ஆண்டு பிறப் பற முயலாது வீணே மாண்டுகழிந்த மன்னர், கடல் அலை குவித்த மணலினும் பலராவர், ஆதலால் நீயும் அவ்வாறு கழியல் ஆகாது என்பனவாம்.

இங்கு எடுத்துகாட்டிய இவ்வடிகளே, இப்பாட்டின் காஞ்சித் திணை அமைந்த உயிர்நிலைப் பகுதியாகும் ஒரு மனிதனது எண் சாண் உடம்பில் சிரசிலிருந்து நாவில் ஒரு பகுதியில் உயிர்நிலைய மான ஹிருதயஸ்தானம் அமைந்திருப்பதுபோல் இப்பாட்டின் நாலில் ஒரு பகுதியான இருநூறுவது அடிக்குமேல் எட்டு அடிக் குள் பாட்டின் முக்கிய பொருளாகிய காஞ்சித்திணையை ஆசிரியர் அமைத்திருப்பது வியப்பும் உவப்பும் தர தக்கதாக விருக்கிறது. இவ்வமையம் பண்டைய அறிஞர் பலர் யாக்கைக்கும் யாப்புக்கும் (செய்யுளுக்கும்) ஒப்புமை கூறியிருக்கும் அருமையும் பொருத்த மும் ஞாபகத்திற்கு வந்து மிகவும் மகிழ் வூட்டுவதாக விருக்கின்ற தன்றோ!

மதுரைக்காஞ்சி என்னும் பொருளில் காஞ்சியை உணர்த்திய ஆசிரியர் இதன்மேல் மதுரையம்பதியைச் சிறப்பிக்கக்கருதி முத லாவது பாண்டிய நாட்டில் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்து வகை நிலங்களும் ஆங்காங்கு அமைந்து இருக்கும் காட்சியையும் அவற்றின் நடுவே மதுரைமா நகரம் கெம்பீரமாக இலங்குகின்ற மாட்சியையும் ஓவியர்கள் படாத்தில் வரைந்து காட்டும் சித்திரம்போல் அழகமையச் சித்திரித்துக் காட்டுகின்றார். இங்ஙனம அல்லங்காடியில் அந்திக்கால நிகழ்ச்சி கூறிய பின்னர் இப்பாட்டில் 546-வது அடிமுதல் மதுரை நகரில் இராக்காலத்து மூன்று சாமங்களிலும் நிகழும் நிகழ்ச்சிகளையும் வைகறைப் போதின் நிகழ்ச்சிகளையும் செவ்விதின் எடுத்து மொழிகின்றார்.

இந்நகரில் சூரியன் அஸ்தமித்த பின்பு உவாமதி உதய மானவுடன் காதலரோடு மகிழ விருப்பமுற்ற பெண்டிர் செங்கழு நீர் மாலையையும் பல்வகை அணிகலங்களையும் அணிந்துகொண்டு கூந்தலுக்கு பயிர்ச்சாந்து தடவி, கலவையை அரைத்து வைத்து விட்டுப் பின்பு ஆடைக்கு மணம் ஊட்டுவார்கள் சில மகளிர் விளக்கேற்றுவார்கள். ஓணநாள் விழாவில் ஒருவரோடொருவர்

போருது வடுப்பட்ட முகமுடைய மறவர்கள் மகிழ்ச்சியுடன் திரிவார்கள். முதற் சூலுடைய மகளிர் தெய்வம் பராவி வாச்சியங்களை முழக்கி. தேவராட்டியுடன் படைப்பு இடுவார்கள் சிலர் முருகக் கடவுள் ஆவேசித்து ஆடுவர். மன்றங்கள் தோறும் குரவை நாடகம் நடைபெறும். சேரிகள் தோறும் புனைந்துரை, பாட்டு, கூத்து முதலியவை நிகழும் இவ்வாறு முதற்சாமம் செல்லும்.

இரண்டாம் சாமம் சங்குகள் ஒலியடங்கிக் கிடக்கும் சட்டக் கால்களைச் சாய்த்துக் கடைகளை மூடிவிட்டு மகளிர் துயில்வார்கள் அடை, மோதகம், அப்பம் விற்கும் அப்பவாணிகர் உட்கார்ந்தபடியே தூங்கி விழுவர் கூத்தரும் துயில்வர், காலத்தே படுக்கைக்குச் சென்றவர் இப்போது ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பர்.

மூன்றாம் சாமத்தில் துயிலாத கண்களையும் அஞ்சாத நெஞ்சத்தையும் ஆண்மையும் களவு நூல் காவல் நூல் களிற்றேச்சியையும் உடைய நகர்க்காவலாளிகள் கள்வர்களைப் பிடிப்பதற்கு ஒற்றி அறிந்து இளைப்பின்றித் திரிவார்கள்.

வைகறைப் பொழுதாகிய விடியற் காலத்து ஓதல் அந்தணர் வேதம் பாடுவார்கள். யாழ்ப்பாணர்கள் காலைப்பண்ணாகிய மருதப் பண்ணையாழில் அமைத்து வாசிப்பார்கள் யானைப் பாகர்கள் யானைகளுக்குக் கவளம் இடுவார்கள் குதிரைகள் புல்லைக்குதட்டித் தின்றுகொண்டு நிற்கும் கடைகளை மெழுகுவார்கள். மகளிர் தங்கள் கால் சிலம்புகலீர் கலீர் என்று ஒலிக்க எழுந்துவந்துகதவுகளைத் திறக்கும் ஒலிகேட்டுக் கொண்டேயிருக்கும் அரசன் துயில் எழுவதற்கு சூதர் மாகதர்கள் வாழ்த்தி துதிப்பாடலைப் பாடுவார்கள். பள்ளியெழுச்சி முரசமும் முழங்கும் எருதுகள் சிலைக்கும். கூண்டுகளில் அடைக்கப் பட்டிருக்கும் சிங்கம், புலி, கரடி முதலிய விலங்குகள் குமுறி ஆரவாரிக்கும். கோழிச் சேவல்கள் கூவும், அன்னம் கரையும், மயில் அகவும் மகளிர் இராக்காலத்தில் மஞ்சத்தில் கணவரோடு ஊடல் கொண்டு, வெகுண்டு, அறுத்தெறிந்த முத்துக்களும், பூக்களும் சிதறி நிறைந்து கிடக்கும் முற்றங்களைப் பெருக்குவார்கள்—என்று இவ்வாறு மதுரை நகரின் இராக்கால நிகழ்ச்சியைக் கற்போர் இப்பொழுது நேரிற் காணுமாறுபோல இயற்கை நலங்கனியக் கூறியது எவ்வளவு இன்பம் ஊட்டுவதாக இருக்கின்றது. இவ்வாறு ஆசிரியர் கூறியது. பண்டைக் காலத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கை நாகரிகங்களையும் உயரிய பண்புகளை உரையாணியாகவும் திகழ்கின்றதன்றோ?

கடைசியாக இப்பாட்டில் ஆசிரியர் அரசனை நோக்கி இத்தகைய சிறப்புவாய்ந்த மதுரை மாநகரில் நீ உனது நாளோலக்க

மண்டபத்தில் அமர்ந்து போரில் அரும்பெருஞ் செயல் புரிந்த வீரர்களுக்கும் புலவர்களுக்கும் இசைவாணர்களுக்கும் தேரும் களிறும் பரியும் தந்து பொன்னும் பொருளும் வழங்கி சுற்றம் சூழ அரசர் அடிபணியப் பன்னெடுங்காலம் வாழ்க என்று வாழ்த்தி இப்பாட்டை முடிக்கின்றார்.

---

## மைசூர் சமஸ்தான தமிழ் இலக்கியமுதல் மகாநாடு

### பங்களூர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

1. மாட்சிமை தங்கிய மைசூர் மகாராஜா அவர்கள் தமிழ் வளர்ச்சிக்காக செய்து வரும் அரும் பெரும் உதவியை நன்குணர்ந்து இந்த மகாநாடு அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

2. தமிழுக்கும் தமிழ் இசைக்கும் புத்துயிர் கொடுத்து வளர்த்து வரும் செட்டி நாட்டு ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கு மைசூர் சமஸ்தான தமிழ் இலக்கிய மகாநாடு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. தமிழ் பண்பாட்டுக்கும் சமையப் பண்பாட்டுக்கும் உறைவிடமான திருப்பனந்தாள் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத தம்பிரான் அவர்கள் தமிழையும் சமையத்தையும் போற்றுதற்காகச் செய்து வரும் தர்மங்களை மிகவும் பாராட்டி மைசூர் சமஸ்தான தமிழிலக்கிய மகாநாடு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

4. இந்த மகாநாட்டுக்காக உதவி புரிந்த பங்களூர், மைசூர், கோலார் வாசிகளான எல்லா அன்பர்களுக்கும் மகாநாடு மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

5. மைசூர் சமஸ்தானத்தில் வாழ்ந்து வரும் தமிழ் அன்பர் யாவரையும் தமிழ்ச் சங்கங்களை நிறுவி தமிழைப் பல துறையிலும் ஆதரித்து வருமாறு மகாநாடு கேட்டுக் கோள்ளுகிறது

6. மாட்சிமிக்க மைசூர் மன்னர்பிரான் ஸம்ஸ்கிருதத்தில் தக்க பாண்டித்தியமுடையவர்களுக்கு "ஆஸ்தான வித்துவான்" என்னும் பட்டம் வழங்கி அந்த மொழிக்கு ஆதரவும் ஊக்க

மும் அளித்து வருவதுபோல் கன்னடம், தெலுங்கு, தமிழ் மொழி முதலிய திராவிட மொழியில் தக்க பாண்டித்தியம் உள்ளவர்களுக்கு அத்தகைய பட்டங்கள் வழங்கியருளி அம்மொழிக்கு ஆதரவளிக்கும்படி மாட்சிமிக்க மைசூர் மன்னர் பிரானவர்களைப் பணிவாக இம்மகாநாடு வேண்டிக் கொள்ளுகின்றது.

7. அடுத்த மகாநாட்டுக் கூட்டம் நமது சமஸ்தானத்தலை நகராகிய மைசூரில் தசராவின் போது நடத்தப்படவேண்டு மென்றும் திரு. உருத்திரபதியவர்கள் அதற்குத்தக்க முயற்சி செய்வதாகவும் ஒப்புக்கொள்ள அவருடைய வேண்டுகோளை மகாநாடு அங்கீகரிக்கின்றது.

8. தமிழர்களனைவரும் தமக்குள் கலந்து பேசும்போது தமிழி லேயே பேசும்படியும், கடிதப் போக்கு வரவு நடத்தும் போதும் தமிழிலேயே நடத்தவேண்டுமென்றும் இம்மகா நாடு தமிழ் மக்களனைவரையும் வேண்டிக்கொள்ளுகின்றது.

9. மைசூர் நாட்டிற்குச் சிறந்ததொரு தமிழ் மாதப் பத்திரிகை ஒன்று அவசியம என்று இம்மகாநாடு கருதுகின்றது.

10. கன்னட நாட்டில் உள்ள தமிழர்கள் கன்னடம் பயிலுவது மிகவும் பயன்படத்தக்கது என்று இம்மகாநாடு கருது கின்றது.

---

எயரோ
மீனம்பாக்கம்
1—1—1942.

அருமை நண்பர்

என் சேங்கல்வராயன் அவர்களுக்கு.

அன்பார்ந்த ஐயா,

தமிழ் மகாநாடு எனக்கு ஒரு புதிய உணர்ச்சியையும் ஊக்கத் தையுங் கொடுத்தது. அங்குள்ள தமிழர் தமிழிடத்துக் காட்டி வரும் ஆர்வத்துக்குச் சமானமாக தமிழ் நாட்டில் ஒன்றுமே இல்லை. பெங்களூரில் சென்றவிடமெல்லாம் தமிழுக்கும் அது காரணமாக எனக்கும் இல்லாத மரியாதை மனம் உவந்து செய்தார்கள். எத்த னையோ பேருடைய உயர்ந்த நட்புக்கிடைத்தது. எல்லாம் தங்க ளால் ஏற்பட்டதே. தங்கள் விடாமுயற்சியை ரோம்பவும் பாராட்

டுகிறேன். தங்கள் முயற்சி நாள்தோறும் தமிழரது தமிழார்வத்தை வளர்த்துவரும் என்று நம்புகிறேன். தங்கள் அன்பையும் விருந்தோம்பலையும் நான் மறக்கமுடியாது.

தங்கள் அன்புள்ள
டி. கே. சிதம்பரநாத முதலியார்.

---

Aum.

SWAMI SUDDHANANDA
Bharatiar.
Sri Auro Bindo Ashram.

Pondichery
(S. India)
Dated 12—12—41.

அன்புத் திருவாளர்

நா செங்கல்வராயருக்கு

இறைவன் அருளால் நலமாகுக.

தாங்கள் பங்களூரில் தமிழ் மகாநாடு கூட்டுவதுபற்றி மிகவும் மகிழ்வு தங்கள் தமிழன்பும், தமிழுக்காகத் தாங்கள் செய்து வரும் தொண்டுகளும் போற்றத் தக்கவை. தமிழர் புதிய விழிப் படைந்தனர் தமிழ் புதுப் பொலிவுடன் எழுந்து தலை நிமிர்ந்து விளங்குகிறது. தமிழணங்கை அரியணையேற்ற வீரத்தமிழர் ஆர்வ முடன் முன் வருகின்றனர். இப்போது தமிழ் மகாநாடுகள் நடத்தி அந்த ஆர்வக்கனலை மேன் மேலும் தூண்டுவது சிறந்த பொது நலமாகும்

தங்கள் மகாநாடு வெற்றி பெறுக! அதில் புலவர் செய்யும் தீர்மானங்கள் செயல்பெற்று தமிழுக்கு ஆக்கந்தருக.

தனிமோனயோகத்தில் இருந்த இடத்திலே இருப்பதால், உடலால் தங்கள் மகாநாட்டில் கலந்து கொள்ள முடிந்திலது. உள்ளம் அன்று அங்கிருக்கும்.

கன்னட நாட்டில் தமிழ் மகாநாடு நடப்பதைப்பற்றி இருபங்கு மகிழ் வெய்கிறது. தமிழ் முதுபெருந்தாய், இன்றும் இளமை யுடன் இருக்கும் அரசி தமிழர் தமிழ் வளர்ச்சியுடன் தாயையும் பெருமைப்படுத்தி மக்களுடன் இணைக்கவேண்டும், மக்களுக்கும்

*சிறந்த நினைவுச் சின்னம்:*

குயின் எலிசபெத்து ஒரு கப்பல் மட்டுமன்று; சூரியன் மறைதல் இல்லாத பேரரசை ஏற்படுத்தியதற்கும், இரு பெரும் போர்களிலும் இங்கிலாந்து முடிவில் வெற்றி அடைந்ததற்கும் முதற்காரணமான இங்கிலாந்தின் கடற்படை வன்மைக்கு ஒரு சின்னமுமாகும்.

அட்லாண்டிக்குப் பெருங்கடலின் இரு கரைகளிலும் உள்ள ஆங்கிலம் பேசும் நாடுகளாகிய இங்கிலாந்து, அமெரிக்கா இரண்டையும் இணைக்கும் உறவுகளில் குயின் எலிசபெத்து மிகச்சிறந்த தொன்றாகும். கடலை வெல்ல மக்கள் கொண்டுள்ள உறுதிக்கு எடுத்துக்காட்டாக இக்கப்பல் மிளிர்கின்றது. கப்பல் கட்டுவதில் ஆங்கிலேயரின் மேன்மைக்கும் குயின் எலிசபெத்து, தக்கதொரு சான்றாகும். தம் அரசகுடும்பத்தாரிடம் ஆங்கிலேய மக்களுக்கு உள்ள உண்மையான அன்புக்கும் இக்கப்பலின் பெயர் ஓர் அடையாளமாய் விளங்குகின்றது.

## 5. ஔவையாரும் அதியமானும்

[ஆ. கார்மேகக் கோன்]

வடவேங்கடம், தென்குமரி என்னும் இவ்வெல்லைக்குட்பட்ட தமிழ் வழங்கும் உலகத்தின் ஒரு பகுதியாய் விளங்கிய சேரநாட்டில் தமிழ்ப்பழங்குடியாகிய பாணர் குடியிலே ஔவையார் என்னும் இந்நல்லிசைப் புலமை மெல்லியலார், பன்னூற்றாண்டுகட்கு முன்னர்த் தமிழகம் தழைக்கத் தோன்றினர்.

அந்நாளில் நம் தமிழ்மொழி மறுவற்ற மதிபோலத் தன்னொளி பரப்பி நன்னிலையுற்று விளங்கிற்று. தமிழ்நாடோ, ஒரு நாட்டின் அறிவு, செல்வம், கல்வி, நாகரிகம் முதலியவற்றின் வளர்ச்சிக்கு அந்நாட்டுப் பெண்டிரின் அறிவே கருவியாமென்ற நுண்மையை நன்கறிந்ததாகலான், 'ஆடவர் பெண்டிர் என்ற வடிவு வேற்றுமையினாலே இரு திறத்தாருள்ளும் உயர்வு தாழ்வு என்பதில்லை; அறிவு வேற்றுமையே இருவருள்ளும் கருதற்பாலதாம்' எனக் கொண்டு, ஆடவர் பெண்டிர் என்ற

இரு பாலார்க்கும் வேற்றுமையின்றி ஒரே தன்மையான அறிவைக் கொடுப்பதற்கு உடன்பட்டிருந்தது. அதனால், அந் நாடு, ஆண் பெண் என்ற பால் வேறுபாட்டை அறவே நீக்கி, விழுமிய கல்வியறிவை வேண்டுவோர்க்கெல்லாம் விழைந்து கொடுத்தது: பிறப்பில் இழிபு கருதாது, கடைநிலத்தோராயினும் கற்றறிந்தவர்களைத் தலை நிலத்து வைத்து மகிழ்வு பூத்தது; குடியிலும், தொழிலிலும், கோட்பாட்டிலும் பல் திறப்பட்ட நன்மக்களும் பகைமையின்றி ஒருங்கு குழுமித் தழுவி மகிழ இருந்தது; இத்தன்மையெல்லாம் நம தண்டமிழ் நாடு கொண்டிருந்தமையினால், குறவர் மறவர் குயவர் பாணர்களது குடியினுள்ளும், அரசர் மரபினுள்ளும், குறமகள் இளவெயினி, காவற்பெண்டு, வெண்ணிக் குயத்தி, ஆதிமந்தியார், பாரி மகளிர், பூதப்பாண்டியன் தேவியார், வெள்ளி வீதியார், நப்பசலையார், நக்கண்ணையார், பொன் முடியார் முதலிய பல நல்லிசைப் புலமை மெல்லியலார் தோன்றி, நம் தமிழ் நாட்டினுக்கு என்றும் பொன்றுப் புகழை நல்கினர். அக்காலத்து இந்நாட்டின் இவ்வியல்பால், நம் ஔவையார் தடையின்றி இளமையிலேயே இயற்றமிழ்க் கல்வியையும், தம் குடிக்குரிய இசை நாடகக் கலைகளையும் நன்கு பயின்று, தேர்ச்சியுற்று, நல்லிசைப் புலமை மெல்லியர் தலைவியராயும், விறல்பட ஆடும் விறலியராயும் விளக்கமுற்றிருந்தார்.

இங்ஙனமிருந்து இவர், தம் குல வாழ்க்கையாகிய பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டு, நம் தமிழகத்தில் நியாயமும் தியாகமும் வீரமுமிக்க திருவுடைய மன்னர் அவைக்களந்தோறுஞ் சென்று, தம் புலமைத் திறனையும், ஆடல் பாடல்களின் விறலையும் வெளிப்படுத்தி, அவர்கள் மனமுவந்தளிக்கும் பெருஞ் செல்வங்களைப் பெற்று, வாழ்ந்து வருவாராயினர்.

இவர் காலத்தில் சேரநாட்டின் ஒரு பகுதிக்கண் விளங்கிய தகடூர் என்னும் ஊரில் அதியமான் நெடுமானஞ்சி என்னும் ஓர் அரசன் அரசு செய்திருந்தனன். அவன் சேரர்க்கு உறவினன்; கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; வீரமிகுந்தவன்: மழவர் என்னும் ஒரு வகை வீரர்கள் அடங்கிய

படையை உடையவன். அவன் இவ்விதச் சிறப்புக்களோடு வண்மையும் மிகுந்தவனாய் விளங்குவதையறிந்த ஔவையார், அவனிடத்துப் பரிசில் பெறக் கருதி, அவனது தகடூரை அடைந்து, அவனைப் புகழ்ந்து பாடினர். அவ்வரசன் இவர்மீது பேரன்பு காட்டி உபசரித்தானாயினும், 'இப்போதே பரிசில் அளித்தால் இவர் அகன்றுவிடுவாராகையால், இவரைப் பிரிய நேரிடும்,' எனக் கருதிப் பரிசில் அளியாது, சில நாள் தாழ்த்திருந்தனன். ஔவையாரும் சின்னாள் அவனது அரண்மனைக்கண் தங்கியிருந்தவர், அவன் பின்னரும் பரிசிலளியாது நீட்டிப்பது கண்டு சின மிகுந்து, அவனை நேரிற்பார்ப்பதற்கும் விரும்பாது, அவன் வாயிற்காவலாளனிடத்துச் சில கூறிவிட்டுச் செல்லக் கருதினார். அதனால், காவலாளனை நோக்கி, "வாயில் காப்போய், வாயில் காப்போய், கொடையுடையோரது செவியிடத்துப் பொருள் விளங்கும் சொற்களாகிய விதையை விதைத்துத் தாம் நினைந்த பரிசிலாகிய தானியத்தை விளைவிக்கும் மனவலியுடையவர்களும், பெருமை பெறுதற்கே வருந்துகின்றவர்களுமான பரிசில் வாழ்க்கையுடைய புலவர்க்கு அடைக்காத சிறந்த வாயிலைக் காப்போய், குரிசிலாகிய நெடுமானஞ்சி, தன் தரம் இத்தன்மையது என்று அறியானோ? அதனை அறியாவிடினும், எம் தரத்தையேனும் அறியான்கொல்லோ? அறிவும் புகழுமுடையோர் அனைவரும் இறந்தொழிந்தாராக, இவ்வுலகம் வறிய இடத்தையுடையதாகிவிடவில்லையே! ஆகலான், இப்போதே புறப்படுகின்றோம்! எமது யாழ் முதலான கருவிகளை மூட்டையாகக் கட்டித் தூக்கிச் செல்கின்றோம்; இவனன்றி எமக்கு இல்லையோ இடம்? எத்திசைச் செல்லினும், அத்திசையில் எம்மை அன்போடு உபசரித்துச் சோறிடுவார் பலருளர்; இதனை நும் அரசனுக்குக் கூறிவிடுவாயாக," என முனிவுடன் மொழிந்து, அறிவும் புகழும் உடைய கொடைஞரிடத்துப் பரிசில் பெறுதற்கு விரைந்தெழுந்தார்.

இங்ஙனம் இவர் சினந்து கூறிச் செல்லுதலை வாயில் காப்போனால் அறிந்த அதியமான் அஞ்சி, இவர் முனிவுக்கு அஞ்சி, விரைந்து வந்து, இவரைக் கண்டு, இவர் கொண்ட கோபந் தணிய வேண்டி நின்று, தனது கொடைமன்றத்துக்கு அழைத்துச் சென்று, வீற்றிருக்கச் செய்து, வரிசை மிக்க பரிசில் அள

வின்றி அளித்து, உணவிற்கு நெல்லும் சிறந்த ஆடைகள் பலவும் கொடுத்து உபசரித்தான். உடனே ஔவையார் உவந்து, 'இத்தகைய வண்மையாளனைப் பரிசில் நீட்டித்தானென்று முனிந்தோமே!' என்று மிக வருந்தித் தம் மனத்தோடு கூறுபவராய், 'அதியமான், ஒரு நாளல்ல, இரு நாளல்ல, பல நாளும் பலரோடும் செல்லினும், முதல் நாள் கண்டபோது கொண்ட அன்பிற்சிறிதுங் குறையாத அன்பையே உடையான்; இவன் பரிசில் நீட்டிப்பினும், நீட்டியாதொழியினும், யானை கையில் எடுத்த கவளம் வாயினுட்செல்லுதல் தவறாதது போல, இவன் நமக்குப் பரிசில் தருதல் தப்பாது," என்று, அவன் பழகியோரிடத்து என்றும் ஒரு தன்மையாகக் கொள்ளும் அன்பையும் அருமையையும் மிகுத்துக் கூறி, வண்மையை வாழ்த்திப் புகழ்ந்து, அவனது மனையின்கண்ணே தங்கியிருந்தனர்.

இங்ஙனம் இருக்குங்கால் ஒரு நாள் அதியமான் ஒரு மலைப் பக்கத்துக்குச் சென்றிருந்தவன், அம்மலையின் பிளவிலிருந்த ஒரு கருநெல்லி மரத்திற் பழுத்து விளங்கிய கனியொன்றைக்கண்டு அதனை அரிதின் முயன்று பெற்றான். அவன், அதனை உண்டவர் நெடுங்காலம் உயிர் வாழ்வார் என்றறிந்தும், அக்கனியைத் தானுண்டு உயிர் வாழ்வதினும், தமது நாவன்மையால் சீரிய பாக்கள் இயற்றி உலகை இன்புறுத்தும் ஔவையார்க்கே தலே சாலப்பயனுடையதெனக் கருதி, அக்கனியின் பெருமையைக் கூறாமலே புலவர்க்குக் கொடுத்து, உண்ணும்படி செய்தான். உண்ட ஔவைப்பிராட்டியார், பின்னர்க் கனியின் விசேடத்தை உணர்ந்து, அதியமான் தன்னினும் தம்மையே மேம்பட மதித்துத் தாம் சாவாது நெடுங்காலம் வாழ்ந்திருக்கக் கருதியதற்கு வியந்து, அவனை நோக்கி, "வீரச் செல்வமுடைய அதிடர் கோமானே, பெரிய மலையுச்சியிற்பெற்ற அமிழ்தமான இனிய நெல்லிக்கனி பெறுதற்கரியது என்று கருதாமலும் அதன் பயனை வெளிப்படக் கூறாமலும் மறைத்துச் சாதல் நீங்க எமக்கு அளித்தாயாதலால், நீ சந்திர மவுலியும் நீல கண்டனுமாகிய சிவ பெருமான் நஞ்சையுண்டும் நிலை பெற்றிருப்பதுபோல, நெடுங்காலம் நிலைபெற்று வாழ்வாயாக!" என்ற கருத்தமைத்து, ஒரு செய்யுளைப் பாடி வாழ்த்தினர். பின்பு அவனுக்கு உயிர்த் துணையாய்ச் சிறந்து, அஞ்சியுடனிருந்து அவனது

அருள், அன்பு, வீரம், தியாகம், நியாயம் முதலிய குணங்களைப் புகழ்ந்து அவ்வப்போது பல கவிகள் பாடி அவனை மகிழ்வித்து வந்தனர்.

ஒளவையார் அதியமானுடன் இங்ஙனம் அமர்ந்து வரும் நாளில், காஞ்சிமா நகரத்தை ஆண்டுகொண்டிருந்தவனாகிய தொண்டைமான் என்னும் அரசன், தனக்குள்ள படை வலி காரணமாக அதியமானைத் தன்னினும் மெலியவனெனக் கருதி, அவனோடு போர் செய்யச் சமயம் நோக்கியிருந்தான். இதனை உணர்ந்த அதியமான், தன் ஆற்றலையும், சிறப்பினையும், அஞ்சாமையையும் தூது மூலம் தொண்டைமானுக்கு அறிவித்தற்குக் கருதியவன், 'இவ்வருப்பெருஞ்செயலுக்குத் தக்கவர், நாவன்மையும், பாவன்மையும், அரசியலறிவும் மிக்க ஒளவையாரே,' எனத் துணிந்து, அவரை அவனிடத்துத் தூது செல்ல வேண்டினன். ஒளவையாரும் அவ்வரசியற்பெருங்காரியத்தைப் பின்னிடைவின்றி ஏற்றுக்கொண்டு, புறப்பட்டுப்போய்க் காஞ்சிமா நகரடைந்து, தொண்டைமானைக் கண்டார். அவனும் புலவராயும் தூதராயும் வந்த ஒளவையாரை முகமன் உரைத்து உபசரித்தான். ஒளவையார் அவனது அரண்மனைக்கண் அன்று உண்டியருந்தி இளைப்பாறித் தங்கியிருந்தனர்.

பின்னர்த் தொண்டைமான் தனது அரண்மனைக் காட்சியைப் பகையரசனாகிய அதியமானிடத்திருந்துவந்த ஒளவையாருக்குக் காண்பிப்பான்போலத் தன் படை மிகுதியையும்பேராற்றலையும் உணர்த்த நினைந்து, இவரை அழைத்துச் சென்று பல இடங்களையும் காட்டி வந்தவன், தனது ஆயுதச்சாலைக்கு அழைத்து வந்து, அங்கு நெய் பூசி உறையிட்டு அலங்கரித்து அணி அணியாய் வைத்திருக்கும் ஆயுதங்களை யெல்லாம் காட்டி நின்றான். ஒருவர் மனத்தது அறிந்து பாடும் ஆற்றல் வாய்ந்த ஒளவைப் பிராட்டியாருக்கு அவனது உட்கிடையை அறிதல் அரியதாமோ? இவர் படைக்கலங்களைப் பார்த்து, அவனுக்குச் செருக்கடங்க அறிவு கொளுத்த நினைந்து சில கூறுபவராய், "இப்படைக் கருவிகளெல்லாம் போரில் பயன்படாமையால் மயிற்பீலி அணியப்பட்டு, மாலை சூட்டப்பட்டு, திரண்ட காம்பு திருத்தி, நெய் பூசி, காவலையுடைய அரண்மனைக்கண் வீணே

இருக்கின்றன; தான் பெற்ற செல்வத்தைப் பல்லோர்க்கும் பகுத்துண்ணும் வண்மையுடைய எம் அதியமான் ஆயுதங்கள், பன்முறை போரில் பகைவரைக் குத்துதலான் கங்கும் நுனியும் முரிந்து, செப்பனிடக் கொல்லனது பணிக்களரியாகிய சிறிய கொட்டிலை அடைந்திருக்கின்றன,'' என்ற கருத்தையமைத்து, ஒரு பாட்டினைப் பாடி, அவனது படைக்கலத்தைப் புகழ்பவர் போல இகழ்ந்தும், அதியமான் படைக்கலத்தைப் பழிப்பவர் போலப் புகழ்ந்தும், குறிப்பால் தொண்டைமான் வீரத்தினும் தம் அதியமான் வீரமே சிறந்ததெனக் காட்டினர். அவ்வளவில் தொண்டையர் கோன் ஔவையாரை நோக்கி, "அம்மையீர், அப்படியாயின், நும் நாட்டுள் என்னோடு போர் செய்யும் வலிமையுடையாருமுளரோ?" என வினவினான். அதற்கு அவர், "வேந்தே, நீ போர் செய்யக் கருதுவையாயின், எம்முடைய நாட்டின்கண் அடிக்குங் கோலுக்கு அஞ்சாது எதிர் மண்டும் பாம்பு போன்ற இளைய வலிய வீரருளர்; அவரேயு மன்றி, மன்றின்கண் தூங்கும் மத்தளவாத்தியத்தின் காற்றடித் தலால் எழுந்த ஓசையைக் கேட்டாலே அது போர்ப்பறை என்று கருதி மகிழும் போர் விருப்புடைய எம்முடைய தலை வனும் உளன்,'' என்று அதியமானது போர் விருப்பத்தையும் அஞ்சாமையையும் எடுத்துக் கூறித் தொண்டைமானது தருக்கை அடக்கிவிட்டுத் தகடூர் வந்து சேர்ந்தார்.

இவர் காஞ்சிக்குத் தூதுபோய் மீண்ட சின்னாட்களுக்குப் பின்னர், திருக்கோவலூர் அரசனாகிய மலையமான் திருமுடிக் காரி என்பான், பல வேற்றரசர்களைப் போரில் வென்று அடக்கி, வெற்றி மிகுந்து, தனக்கு நிகராவார் ஒருவருமில ரென்று பெருமிதங்கொண்டிருந்தான், இதனை அறிந்த அதியமான், அவனது ஆற்றலை அடக்கித் தன் புகழை மேம் படுத்தக் கருதி, அவனோடு பகைமை கொண்டு, நால்வகைப் பெரும்படையோடும் போய், மலையமானது கோவலூர் மதிலை வளைத்தனன்; கோவலூர் அரசனாகிய காரியும் காரிக் குதிரை யூர்ந்து படையுடன் வந்தெதிர்த்துக் கடும்போர் புரிந்தனன். அதியமான் தனது வேலாலும், வாளாலும், ஆளாலும், கரியா லும், பரியாலும் காரியின் படையை முரியடித்துப் பெருஞ் சமர் நிகழ்த்தினான். அவ்வமயம் அதியமானுடன் போர்க்களஞ்

சென்றிருந்த ஔவையார், காரி, அதியமான் அஞ்சியின் போர் வெல்லுந் திறத்தையறியானாய் வந்து பொருதலால், பல உயிர்கள் மடிவதற்கிரங்கி, அவனுக்கு அதியமானின் ஆற்றலை அறிவுறுத்திப் பணிந்து போகுமாறு கூறிப் போரை ஒழித்தற்குக் கருத்துக் கொண்டார். மலையமானையும் அவன் துணை வீரர்களையும் நோக்கி, "அதியமான் போர் செய்தற்கு நின்ற இடத்தினின்று பெயர்ந்து உலாவி உறையினின்றும் உருவிய வாட்கள் பகைவரது உடம்பின் தசையின் கண்ணே முழுகிப் பதிந்து கதுவாய் போய் வடிவிழந்தன: அவன் வேல்கள் குறும்பரின் அரண்களை வென்று, அவர்களது நாட்டை அழித்தலால், காம்பும் ஆணியும் அசைந்துகெட்டன; அவன் களிறுகள் கணைய மரத்தால் தடுக்கப்பட்ட கதவைப் பொருது பகைவரது அரணை அழித்தலால், பெரிய தந்தங்களிற்கட்டிய பூண்கள் கழன்றன; அவன் குதிரைகள் போர்க்களத்திற் பொருத வீரர்களது மார்பு உருவழியும்படி ஓடி உழக்குதலால், இரத்தக்கறை பட்ட குளம்புகளையுடைய வாயின; அதியமானோ, நிலவுலகம் அடங்காத படையையும், கழல் வடிவாகவும் கிண்ணி வடிவாகவுஞ் செய்த செறித்த அம்புகள் துளைத்த கேடயத்தையுமுடையவன்; போர்க்களத்தில் அவனாற் கோபிக்கப்பட்டோர் பிழைத்தல் எங்கேயுளது? நெல் வளமிக்க உங்களுடைய ஊர்கள் உங்கட்கு உரியனவாக விரும்புவீர்களாயின், அவனுக்குத் திறை கொடுத்தல் வேண்டும்; அங்ஙனம் நீங்கள் கொடுக்க மறுப்பீர்களாயின், அவ்வுரிமையை நீங்கள் அடைய அவன் உடன்படுவானல்லன்; அவனது போர்த் திறத்தை நான் உள்ளவாறு சொல்லியும் நீங்கள் அதனை அறியீர்களாயின், உங்கள் மனைவியரை நீங்கள் பிரிதல் வியப்பன்று. ஆகையால், அதனை ஆராய்ந்து போர் செய்மின். எங்கள் வீரன், நாளொன்றுக்கு எட்டுத் தேரைச் செய்யுங் கைவன்மையுடைய தச்சன் ஒரு மாதகாலம் ஆராய்ந்து செய்யப்பட்ட ஒரு தேர் உருளையை ஒத்த விரைவும் வன்மையுமுடையவன்," என்று அதியமானது ஆற்றலையெல்லாம் எடுத்துரைத்தார். இங்ஙனம் இவர் உரைத்தும், மலையமான் வென்றியில் மிக்க வேட்கையுடையவனாதலின், தன்னுயிர்க்கும் பிறவுயிர்க்கும் இரங்காது எதிர் நின்று

போர் செய்து இறுதியில் அதியமான் அஞ்சிக்கு அஞ்சிப் புறங் கொடுத்தோடினான். அவனுடைய படைகளும் நிலை கலங்கிக் கலைந்தன. கோவலூர், அதியமானது ஆட்சிக்குட்பட்டது. அவனது போர் வெற்றியைக் கண்ட பரணர் என்னும் புலவர் பெருந்தகையும் ஔவையாரும் வியந்து அவனைப் புகழ்ந்தனர்.

இங்ஙனம் அவ்வதியமான், கோவலூரை வென்று கைக் கொண்டபின்னர் ஔவையாருடன் மீண்டு தகடூர் புகுமளவில் அவ்வமயத்து நீண்ட நாளாக மகப்பேறில்லாமலிருந்த தனக்குத் தவமகன் பிறந்திருக்கிறானென்று தெரிந்து, புதல்வன் பிறந்தவுடன் புதல்வன் முகத்தைத் தந்தை பார்த்து மகிழ வேண்டுமென்பது அறநூல் விதியாகலின், தான் பூண்ட போர்க் கோலத்தைக் களையாமலே விரைவிற்போய் மகன் முகத்தைக்கண்ணுற்றான். உடனிருந்த ஔவையார், அப்போது அத்தன்மையை, "கையின்கண் உள்ளது வேலே; காலின்கண் உள்ளது வீரக்கழல்; உடம்பின்கண் உள்ளது வியர்வை; கழுத்தின்கண்ணது பகைவர் படை பாய்ந்த ஈரம் புலராத பசிய புண்; பகைவரை வெகுண்டு பார்த்த கண், தவ மகனைக் கண்டும் சிவப்பு நீங்கினதில்லை; ஆதலால், இவன் சோபத்துக்காளான பகைவர் பிழைத்தலுமுண்டோ!" என வியந்து, அதியமானது வீரத்தைப் புனைந்துரைத்தார்.

இவர்கள் செய்தி இங்ஙனமாக, அதியமானஞ்சியால் வெல்லப்பட்டுத் தனது கோவலூரை இழந்த மலையமான், இழந்த ஊரை எவ்வாற்றாலேனும் மீண்டும் பெறக் கருதி, அதற்குத் துணை தேடி, முன்பு பல முறையும் போரில் தன்னைத் துணையாகப் பெற்றவனும் சிறந்த வீரனுமாகிய சேரமான் பெருஞ்சேரலிரும்பொறை என்னும் அரசனை அடைந்து, தனக்கு உதவி புரியுமாறு வேண்டினன். அவன் தன் நண்பனாகிய அவனுக்குத் துணை செய்ய ஒருப்பட்டுப் பெரும்படையோடு புறப்பட்டவன், வல்வில் ஓரி என்னும் வள்ளலுக்குரிய வளமிக்க கொல்லி மலையை முதற்கண் பொருது கைப்பற்ற வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டான். மலையமான் அதற்கிசைய, இருவரும் கூடிக் கொல்லி மலையை முற்றுகையிட்ட

னர். அவ்வமயம் ஓரி, மலையமானுக்குப் பகைவனாகிய அதியமான் நெடுமானஞ்சியைத் தனக்குத் துணையாக உதவும்படி வேண்டினான். அதியமான் தன்மீது படையெடுக்கக்கருதியிருக்கும் பெருஞ்சேரலிரும்பொறையையும், மலையமானையும் வலி தொலைப்பதற்கு இதுவே நல்ல தருணமென நினைத்து, தன் நட்பரசராகிய சோழனையும் பாண்டியனையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு, ஓரியின் கொல்லிக்கூற்றத்துக்கு வந்து, ஓரியுடன் சேர்ந்து, சேரமானோடும் மலையமானோடும் பெரும்போர் புரிந்தான். அப்போரில் பெருஞ்சேரல், அதியமானையும் சோழ பாண்டியரையும் வென்றோட்டி, அவர்தம் முரசுங்குடையுங் கவர்ந்து, ஓரியைக் கொன்று, கொல்லி மலையைக் கைப்பற்றிக் கொண்டான். அதியமான் தனது தகடூர்ப் போரில் மதிலினுள் மறைந்திருந்தான்; மலையமானும், பெருஞ்சேரலும் தகடூர்மேற் படையை நடாத்தி மதிலை வளைத்தனர். அதியமான் மதிலுள்ளிருந்து வெளி வந்து எதிர்த்துப் போர் செய்யாதிருந்தனன்.[1] பகைவர் மதிலினை வளைத்தலையும் அதியமான் வாளா இருத்தலையுங் கண்ட ஔவையார், அதியமானுக்கு அவனது ஆற்றலை எடுத்துக்காட்டிப் போரில் மனஞ்செல்ல ஊக்கமூட்டுவதற்குக் கருதி, அவனை அணுகி, "மலைச்சாரலிலுள்ள புலியானது சீறுமிடத்து, அதற்கு எதிர் நிற்க வல்ல மான் கூட்டமும் உளவோ? சூரிய மண்டலம் சொதித்து எழுமாயின், ஆகாயத்தினும், திசையின்கண்ணும் இருளுமுளதோ? அவை போல நீ போர்க் களம் புகுந்தால், இவ்வுலகத்தில் உனது நாட்டைக் கவர்ந்து ஆரவாரிக்கும் வீரரும் உளரோ?" என்று கூறினார்.

இது கேட்ட அஞ்சி, வீரங்கொண்டு போர் விருப்புற்று அஞ்சாது பகைவரை ஓட்டுதற்கு மதிற்புறத்துப் போர்க்களம் புகுந்து, பகைவர் வேல் வரினும் விழித்த கண் இமையாது வீரதீரமோடு போர் உடற்றினான். அப்போது பகைவர் விடுத்த படைகள் பல அதியமானது மார்பினும், கழுத்தினும், முகத்தினும் பட்டுப் புண்படுத்தின; அவ்வமயத்தும் ஔவையார்

---

1. "ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர் செல்லாது தன் மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின், அஃது உழிஞையில் அடங்கும்; அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதியமான் இருந்ததாம்" (தொல். பொரு. 62 சூ. உரை. நச்.)

அதியமான் முன் சென்று, "பெருந்தகாய், பெருஞ்சமர் புரிந்து நீ விழுப்புண் பட்டபடியால், உன்னோடு எதிர்த்த அரசர் பலர், தங்களுக்கு யுத்தத்தில் இறவாமையால் உளதாகும் குற்றம் நீங்கும்படி இப்போது உன் வாட்போரில் மாண்டனர். இனி நீ வருந்திப் போர் செய்து வெல்ல வேண்டுவது யாதுளது?" என்று பின்னரும் அவனை ஊக்கினர்.

அதியமான், அப்புண்பட்ட நிலையிலும் தளராது போர் புரிந்தான்; இறுதியில் பெருஞ்சேரல் விடுத்த வேலொன்று, காற்றினும் கூற்றினுங் கடுகி வந்து, அதியமான் அஞ்சியின் நெஞ்சிற்பாய்ந்து, ஊடுருவிச் சென்றது. அதனால், அதியமான் சோர்ந்து தேரிற்சாய்ந்து உயிர் துறந்தான். அந்தோ! அவ்வமயத்து அவனுக்கு இன்னுயிர் நண்பரான ஔவையார் எய்திய கௌவையை எங்ஙனம் கூறுவது! புலவர் அவன் இன்குணங்களை எல்லாம் நினைந்து நினைந்து வருந்திப் பிரிவாற்றாது புலம்புகின்றவராய், 'சோறு எல்லார்க்கும் பொதுவாதலால், அது சிறு அளவினதாக உள்ளபோதும், மிகப் பல கலத்தோடும் பலரோடுங்கூட உண்பான்; அது கழிந்ததே! மிக்க அளவினையுடைய சோற்றின்கண்ணும் மிகப்பலரோடுங்கூட உண்பான்; அது கழிந்ததே! உணவிருக்கும் இடமுழுதும் எங்களுக்கு (உண்டு களிக்க) அளிப்பான்; அது கழிந்ததே! அம்பும் வேலும் தைத்து உருவுமிடமாகிய போர்க்களம் முழுதும் தான் சென்று நிற்பான்; அது கழிந்ததே! நறுமணமுள்ள தன்னுடைய கையால் எம்முடைய தலையைத் தடவி அன்பு செய்வான்; அது கழிந்ததே! அதியமான் மார்பகத்துத் தைத்த வேல், அவன் மார்பில் மாத்திரம் தைத்ததன்று; அது பாணரது பாத்திரத்தின் துளையில் உருவி, இரப்போர் கையினுள்ளும் தைத்துருவித் தன்னாற் புரக்கப்படுஞ் சுற்றத்தாரது கண்ணின் கருமணி ஒளி மழுங்க, புலவரது நாவின்கண்ணேயும் போய் விழுந்தது. எமக்கு ஆதாரமாகிய எம்மிறைவன் எவ்விடத்துள்ளான்கொல்லோ! இனி இவ்வுலகத்தில் பாடுவாருமில்லை; பாடுவார்க்கொன்று ஈவாருமில்லை; குளிர்ந்த நீர்த்துறைக்கண்ணே பூக்கும் பகன்றைப்பூ, பிறராற் பறித்துச் சூடப்படாமல் வீணே கழிந்தாற்போல, பிறர்க்கு ஒரு பொருளைக் கொடாது மாய்ந்துபோகும் உயிர்கள் மிகப்பல: அத்தன்மையனல்லன் எம்மரசன்! அவனையின்றிக் கழி

கின்ற காலையும் மாலையும் இனி இல்லையாகுக!" என வருந்திக் கூறினார். பின்னர், துஞ்சிய அஞ்சியை, ஈமச் சிதையில் ஏற்றி எரியூட்டினர்; ஈமத்தீ அவனது உடலிற்பற்றியது. அப்போது ஔவையார், "ஈமத்தீ, இவனுடல் சிதையாமல் அவியினும் அவிக; அன்றிச் சிதையும்படி ஓங்கி எரியினும் எரிக; ஞாயிற்றை ஒப்போனது புகழ் உடம்பு ஒரு காலத்தும் அழியாது," என்று அவன் புகழ் உடம்பை வியந்து கூறி இரங்கினவராய்த் தகடூர்க்கண்ணே தங்கியிருந்தனர்.

## 6. அன்னைக்கு

[டாக்டர் மு. வரதராசனார், M. O. L.]

அன்புள்ள அம்மா,

உன் கட்டளைப்படியே இது வரையில் நடந்தேன்; இன்று நடக்க முடியவில்லை.

"தமிழர்கள் உணர்ச்சி அளவில் ஊக்கம் மிகுந்தவர்கள்; வாய்ச்சொல் அளவில் வீரம் மிகுந்தவர்கள்; இந்த இரண்டும் மட்டும் பெற்றவர்களால் ஒரு நாடு முன்னேற்றம் அடைய முடியாது. கடமை ஒழுங்கு ஒன்று வேண்டும். இந்த ஒன்று மட்டும் இருந்து, மற்ற இரண்டும் இல்லாதிருந்தாலும் கவலையில்லாமல் தமிழ் நாடு எப்போதோ தலையெடுத்திருக்கும். நீ ஒரு தமிழன்; பழங்காலப் பிற்போக்குத் தமிழனாய் இருந்து வாயால் மட்டும் விளங்காதே; உணர்வால் மட்டும் உயராதே; செயலாலே சிறப்படு," என்று எனக்கு எழுதிய கடிதத்தை மறந்துவிடவில்லை. என் கடமையில் கண்ணுங்கருத்துமாய் இருந்து முற்போக்குத் தமிழன்தான் என்பதைக் காட்டப்போகிறேன்; பாடங்களை நன்றாகக் கற்று முதல் வகுப்பில் தேறப் போகிறேன். ஆனாலும், நேற்று வரையில் அமைதியாய் இருந்தது போல, இன்று இருக்க முடியவில்லை. ஆகையாலேதான் சில திங்கள் கழித்து இது போலக் கடிதம் எழுதுகிறேன்:

அம்மா, நான் எப்படி இன்று அமைதியாய் இருக்க முடியும்? உலகமே அழுகின்றதே! நான் மட்டும் புத்தக உலகத்தில் என்னை மறக்க முடியுமா?

உலகம் கண்ணீர் விடுகின்றது: ஒரு வீடு, ஒரு நகரம், ஒரு நாடு கலங்கவில்லை; உலகம் கலங்கி உருகுகின்றது. வீடு தோறும் இழவு, நகரந்தோறும் சாக்காடு நேர்ந்தது போல இருக்கின்றதே! ஒவ்வொருவர் முகமும் வாடிச் சுருங்கிவிட்டதே!

அம்மா, இமயமலை தலைகிழாய்ப் புரண்டிருந்தாலும், இவ்வளவு பெரிய அதிர்ச்சி உண்டாயிருக்காது. பூகம்பம் உண்டானாலும், ஒவ்வொரு பகுதிதான் நடுங்கும். ஆனால், உலகத்தார் உள்ளமெல்லாம் அதிரும் அதிர்ச்சி இந்திய நாட்டிலே டில்லியிலே நடந்துவிட்டதே!

வாழ்ந்த நாளிலும் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொரு வகை மாறுதலை ஏற்படுத்தும் ஆற்றல் அந்தத் தூய மெல்லிய உடலுக்கு இருந்தது. உணர்வற்று வீழ்ந்த நாளிலும் எல்லோரையும் ஒரு சேரக் கலங்க வைக்கும் ஆற்றல் அந்த நல்லுடலுக்கு இருந்ததே!

புத்தர் வாழ்ந்தார்; அவர் வாழ்நாளில் லக்ஷக்கணக்கான மக்களின் வாழ்க்கையைத் திருத்த முடிந்தது. சாக்ரட்டிஸ் வாழ்ந்தார்; அவருடைய வாழ்நாளில் பதினாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை விளைக்க முடிந்தது. ஏசுநாதரும் அவ்வாறே. ஆனால், வாழ்நாளிலேயே கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கினவர் யார் அம்மா? காந்தியடிகள்—இந்தப் பெயரையும் நினைத்து, தம் மனத்தையும் தொட்டுப் பார்க்கட்டும்! அவருடைய பகைவரும் அவரிடமிருந்து கற்று வளர்ந்த புதிய முறைகள் சில உண்டு என்பதை உணர்ந்துகொள்ளார்களா?

எல்லோரும் அரசியல் காந்தியை அறிவார்கள். அரசியலில் அவர் பெருந்தலைவர் என்பதே பெரும்பாலோருக்குத் தெரிந்தது. ஆனால், இது முழு உண்மை அன்று; ஓரளவுதான் உண்மை. இன்னும் எண்ணிப் பார்த்தால், அவருடைய அரசியல் கொள்கையில் கருத்து வேறுபட்டவர் எங்கும் இருக்கின்றனர். அவருடைய அரசியல் கொள்கைகளுக்குச் செல்வாக்கு இருந்தாலும், உடன்படாமல் புறக்கணித்த தலைவர்களும் உண்டு; அறிஞர்களும் உண்டு; தொண்டர்களும் உண்டு.

ருக இறங்கச் செய்து ஒழுங்குப்படுத்தவும் இவை பயன்படும். விமானிகளுடன் ரேடியோ மூலம் பேசுவதற்குச் சிற்றலைகளை உபயோகிப்பதால் ஒலி மிகவும் தெளிவாகக் கேட்கிறது. இத்தகைய வசதிகளை இப்போது வாஷிங்டன், சிக்காகோ, நியூயார்க்கு முதலிய நகரங்களில் கையாளுகிறார்கள்.

இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குள் தொலைக் காட்சியும் (டெலிவிஷன்) சீர்பெற்றுவிடும். அதையும் பயன் படுத்திக்கொண்டால், காரிருளும் மூடுபனியும் சூழ்ந்திருப்பி னும், விமானத்திற்கு முன்னாலுள்ள மலை உச்சிகளும், மூகிலும், புயலும், அருகில் வட்டமிட்டுத் திரியும் விமானங்களும் விமானியின் அறையிலுள்ள திரையில் தெரியும். மூற்கூறப் பட்ட வசதிகள் அமெரிக்க நாடுகளிலுள்ள பெரும்பாலான விமான நிலயங்களில் வழக்கத்தில் வந்துகொண்டிருக்கின் றன.

இப்போது இத்தகைய வசதிகள் போதாமையால், இருக்கும் கஷ்டங்களை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றுதான் அமெரிக்க விஞ்ஞானிகள் பாடு படுகின்றார்கள். விமானங்களுக்கு வழி காட்டும் இக்கருவிகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை எல்லா நாடுகளும் உணர்ந்து பின்பற்றும் என்பதற்கு ஐயமில்லை. இந்தச் சீர்திருத்தங்களெல்லாம் செய்தபின் வேண்டுமானால் ஒரு தரம் கட்டாயம் பறந்து பார்த்துவிடுகிறது என்று இப்போது பலர் எண்ணமிட்டுக் கொண்டிருப்பார்களென்பதற்கும் ஐயமில்லை.

## 10. மணிமேகலையும் புண்ணியராசனும்

[ஆ. கார்மேகக் கோன்]

சோழவள நாட்டிலே காவிரி கடலோடு கலக்கும் சங்கமுகத் துறையிலேயுள்ள சோழரது தலைநகரும் துறைமுகமுமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலன் என்னும் வணிகர் குலதிலகனுக்கு, மாதவி என்னும் நாடகக்கணிகை வயிற்றிற் பிறந்த மணிமேகலை என்பாள், தன் தந்தையாகிய கோவலன்

மதுரையில் பாண்டியன் நெடுஞ்செழியனுல் கொலையுண்டிறந்த செய்திகேட்டு வருந்திக்கண்ணீர் விடுவதை ஒருவகையாக மாற்ற நினைந்த அவள் தாய் மாதவி, மணிமேகலையை நோக்கி, 'நீ தொடுக்கும் பூங்கண்ணி கண்ணீர் பட்டமையான் தூய்மை யொழிந்து ஐயனுக்கு ஆகாததாயிற்று; ஆதலால், சோலை சென்று புதுமலர் கொணர்க,' எனக் கூறினுள். கூறலும், அங்ஙனமே மணிமேகலை சுதமதி என்னும் தோழியோடு மலர் பறிப்பதற்கு உவவனம் என்னும் சோலைக்குச் சென்ருள். இதனை, முன்னமே மணிமேகலையை மனைவியாக அடைய விரும்பியிருந்த அந்நகரத் தரசன் கிள்ளி வளவன் புத்திரன் உதயகுமாரன் என்பான் அறிந்து, அவளைக்கவர இது தக்க சமயமெனக் கருதித் தேரேறி உவவனம் வந்தான். அங்ஙனம் அவன் வருவதையுணர்ந்த சுதமதி என்னும் தோழி மணிமேகலையைப் பாதுகாக்க, அவளை அச்சோலையிலுள்ள ஒரு பளிங்கறையுள் புகச்செய்து, உதய குமாரனுக்கு அவன் கருத்துத் தவறு என எடுத்துக்காட்டிப் பல நீதிகளைக் கூறினுள். அதனுல், அவன் வாளா திரும்பிச் சென்றுவிட்டான்.

பின்னர்ப் பளிங்கறையிலிருந்து வெளிப்போந்த மணிமேகலையும் சுதமதியும் உதயகுமாரனைப்பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது கோவலனது குலதெய்வ மாகிய மணிமேகலா தெய்வம், கோவலன் மகள் மணிமேகலைக்கு முற்பிறப்பின் தொடர்பால் உதயகுமாரன்மீது செல்லும் மனத்தைத் தடுத்து, அவளைப் புத்த சமய வழியிற் செலுத்தி நற்கதி பெறச் செய்யக்கருதி, அவர்கள் அறிந்த ஒரு மடந்தை வேடங்கொண்டு அங்கு வந்து, அவர்களை நோக்கி, "நீங்கள் இங்கிருந்தால் மீளவும் உதயகுமாரனுல் உங்களுக்குத் துன்பம் உண்டாகும்; ஆகையால், முனிவர்கள் வசிக்கும் சக்கரவாளக் கோட்டத்திற்குச் செல்லுங்கள்," என்று கூறி, அவர்களை அடுத்துள்ள சக்கரவாளக் கோட்டம் என்னும் இடத்திற்குச் செல்லும்படி செய்தது. அன்றிரவில் சுதமதியும் மணிமேகலையும் அங்கு உறங்கும்போது மணிமேகலா தெய்வம் வந்து, மணிமேகலையை மாய வித்தையால் மயக்கித் தழுவி எடுத்துக்கொண்டு ஆகாய வழியே முப்பது யோசனைத் தூரம் தெற்கே சென்று, கடல் சூழ்ந்த மணி பல்லவம் என்னும் தீவில் வைத்துவிட்டுச் சக்கரவாளக் கோட்டத்திற்குத் திரும்பி வந்து,

சுதமதியைத் துயிலெழுப்பித் தான் மணிமேகலையைத் தூக்கிச் சென்றதையும், அவள் முற்பிறப்பின் உணர்ச்சி பெற்று அற்றைக்கு ஏழாவது நாளிலே வருவாள் என்பதையும் சொல்லிச் சென்றது.

அப்பால் சுதமதி துயிலெழுந்து, மணிமேகலையின் பிரிவாலுற்ற பரிவால் வருந்திப் பொழுது புலர்ந்த பின் கவலையுடன் மாதவியை அடைந்து, நிகழ்ந்தவற்றைக் கூற, மாதவி மணியிழந்த நாகம் போலத் துன்பத்துள் மூழ்கியிருந்தாள்.

இவர்கள் இங்ஙனம் வருந்திக்கொண்டிருக்க, மணிபல்லவத்தில் கடலருகே மணலில் துயின்ற மணிமேகலை, துயிலுணர்ந்து, சுதமதியைக் காணப்பெறாது, இடமும் தோற்றங்களும் வேறாயிருப்பதை அறிந்து திகைத்து, சுதமதியை அத்தீவத்துப் பல இடங்களிலும் தேடியும் காணப்பெறாமையால், பல சொல்லிப் புலம்புகிறவள், கொலையுண்டிறந்த தன் தந்தை கோவலனை நினைந்து புலம்பிக்கொண்டிருந்தாள். அங்ஙனம் புலம்பிக்கொண்டிருப்பாள் முன்னர், இந்திரனால் இடப்பெற்றதும் பழம்பிறப்பை உணர்த்துவதுமான புத்தபீடிகை தோன்றியது. தோன்றலும், மணிமேகலை விம்மிதங் கொண்டு பரவசமாய்க் கரங்கள் தலைமேற்குவிய, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, பீடிகையை மும்முறை வலம் வந்து தொழுது, தன் பழம்பிறப்பு நிகழ்ச்சிகளையும் தெய்வம் தன்னை அங்குத் தூக்கிக்கொண்டு வந்ததையும் உணர்ந்து, அத்தெய்வத்தின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது மணிமேகலா தெய்வம், மணிமேகலையின் பக்குவத்தை அறிந்து, ஆகாயத்தினின்றும் இறங்கி வந்து, அவளுக்கு முற்பிறப்பில் கணவனாயிருந்த இராகுலன் வரலாற்றையும் அவனே இப்போது உதயகுமாரனாய்ப் பிறந்திருக்கிறான் என்பதையும் கூறி, ஆகாய வழியே சஞ்சரிக்கச் செய்வதும், உணவின்றியே இருக்கச் செய்வதும், வேறு வடிவம் அளிப்பதுமாகிய மந்திரங்கள் மூன்றை அவளுக்கு உபதேசித்துவிட்டு அகன்றது.

அப்பால் மணிமேகலை, அத்தீவிலுள்ள புளினங்களையும், பொய்கைகளையும், பூஞ்சோலைகளையும் பார்த்துக்கொண்டே உலாவி வருகையில் பெண் ஒருத்தி எதிர்ப்பட்டாள்; அவள் மணிமேகலையை நோக்கி, "மிக்க துயரத்தோடு தனியே திரியும் நீ

யார் ?' என்று கேட்டாள். அதற்கு மணிமேகலை தன்னுடைய சென்ற பிறப்பின் செய்திகளையும் இப்பிறப்பின் வரலாற்றையும் கூறி, "உன் வரலாறு யாது?" எனக் கேட்க, அவள், "இத்தீவிற்கு அயலிலுள்ள இரத்தினதீவத்திலே மிக உயர்ந்து விளங்கும் சமந்தகூடமலையின் உச்சியிலே உள்ள புத்ததேவரின் அடியிணைப்படிமங்களைத் தரிசித்துவிட்டு இத்தீவிற்கு முன் ஒரு காலத்தில் வந்தேன்; அது முதல் இந்திரன் கட்டளையால் இத்தரும பீடிகையைக் காத்துக்கொண்டிருக்கிறேன்; என் பெயர் தீவதிலகை என்பது," என்று தன் வரலாறு கூறிப் புத்தபீடிகையின் மகத்துவத்தையும் அதனைத் தரிசித்து மணிமேகலை பழம்பிறப்புணர்ந்ததையும் புகழ்ந்து கூறினாள். கூறியவள், ஆபுத்திரன் கோமுகிப் பொய்கையில் முன் ஒரு நாள் விட்ட அக்ஷயபாத்திரத்தை மணிமேகலையின் கையிற்படுத்த எண்ணி, "இப்பீடிகைக்கு முன்னே மாமலர்க்குவளையும் நெய்தற்பூக்களும் கலந்து, கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சி ஒன்றுளது; அப்பொய்கையுள் அமுதசுரபி என்னும் அக்ஷயபாத்திரம் அமிழ்ந்திருக்கின்றது; அஃது ஒவ்வொருவருடத்திலும் புத்ததேவர் அவதார காலமாகிய வைகாசி சுத்த பூர்ணமை நாள்தோறும் மேலே வந்து தோன்றுகின்றது; அந்நாள் இந்நாளேயாம்; அது தோன்றும் வேளையும் இதுவே; இப்போது அப்பாத்திரம் அருளறம் பூண்ட உனது கரத்தில் வருமென்று கருதுகின்றேன். அதில் எடுக்கும் அன்னம் எடுக்க எடுக்க மேன்மேலும் வளர்ந்துகொண்டே வரும்; அதன் வரலாற்றைப் பின்பு புகார்நகரத்து அறவணவடிகளிடம் கேட்டுணர்வாயாக," என்று மணிமேகலைக்குச் சொன்னாள். சொல்லலும், மணிமேகலை அதனை விரைந்து பெறுதற்கு விரும்பிப் புத்தபீடிகையை வணங்கிக் கோமுகிப் பொய்கையை அடைந்து வலமாக வந்து நின்ற அளவில், அப்பாத்திரம் மணிமேகலையின் கையை அடைந்தது. உடனே அவள் அளவற்ற மகிழ்ச்சி எய்திப் புத்த தேவரின் திருவடிகளைத் துதித்து நின்றாள். இங்ஙனம் நின்ற மணிமேகலைக்குத் தீவதிலகை,

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்

பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி.''

எனப் பசித்துன்பத்தின் கொடுமையையும்,

''மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே.''

என அப்பசியை ஆற்றுவோரது சிறப்பையும் கூறி அறிவுறுத்தினாள்.

இதனை அறிந்த மணிமேகலை, ''குழந்தையின் முகத்தைக் கண்டு பால் சுரந்தளிக்கும் தாய்போல, ஏழைகளது முகத்தைக் கண்டு இரங்கி, இப்பாத்திரம் மேன்மேலும் அவர்களுக்கு அமுது சுரந்தளிக்கும் அற்புதத்தைக்காணும் விருப்புடையேன்,'' என்று கூறித் தீவதிலகையோடு சிறிது நேரம் அளவளாவியிருந்து, அவளைப்பணிந்து விடைபெற்று,புத்தபீடிகையைத் துதித்து, ஆகாய கமன மந்திரத்தை உருவிட்டு மேலெழுந்து ஆகாயவழியே புகார் நகரஞ்சென்று, தன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் மாதவி சுதமதி இருவரையும் கண்டாள் ; அவர்கள் வியப்படையும் வண்ணம் அவர்களுக்கு முற்பிறப்பைத் தான் அறிந்தபடியே உணர்த்தி, '' இது ஆபுத்திரனது திருக்கரத்திலிருந்த அமுத சுரபி ; இதனைத் தொழுமின்,'' என்று அக்ஷய பாத்திரத்தைச் சுட்டிக் கூறித் தொழும்படி செய்தாள். பின்பு தவவழியைப் பெறும்பொருட்டு அறவணவடிகளை அடைவதற்கு அவர்களையும் அழைத்துக்கொண்டு அவர் இருக்கும் இடத்தை விசாரித்தறிந்து, அவரைத் தரிசித்துப் பணிந்து, உவவனஞ் சென்றது முதல் மணிமேகலா தெய்வத்தால் மணிபல்லவஞ் சென்று புத்தபீடிகையைத் தரிசித்துப் பழம் பிறப்புணர்ந்து அமுத சுரபியைப் பெற்றது வரையுமுள்ள நிகழ்ச்சிகளைக் கூறித் தனக்குத் தருமோபதேசம் புரிந்து ஆபுத்திரன் வரலாற்றையும் தெரிவிக்கும்படி வணங்கிக்கேட்டாள். அதற்கு அம்முனிவர் மகிழ்ந்து, '' சில நாள் கழித்து உனக்குத் தருமோபதேசம் செய்வேன் ; நீ உயிர்மருந்துபோன்றதாகிய இவ்வமுத சுரபியைக்கொண்டு பசிப்பிணியை உலகில் ஒழிப்பாயாக,'' என்று கூறிவிட்டு மணிமேகலை விருப்பப்படி ஆபுத்திரனது வரலாற்றைக் கூறத்தொடங்கி, அவன் பிறந்த

தும், வளர்ந்ததும், அமுதசுரபி பெற்றதும், மணிபல்லவத்தில் உயிர் நீத்ததும், பின்பு சாவகநாட்டில் புண்ணிய ராசனாய்ப் பிறந்து அரசு செய்வதுமாகிய வரலாறனைத்தையும் விரித்துக் கூறினார்.

பின்னர் மணிமேகலை, அறவணவடிகளின் கட்டளையின் படி அங்கநாத்து ஆதிரை என்னும் கற்புடைப் பெண்டின் கைபால் முதன்முதல் அமுதசுரபியில் பிச்சையிடப் பெற்று, அதினின்றும் வளரும் உணவால் பசித்தோர் பசியைப் போக்கி, காயசண்டிகை என்னும் வித்தியாதர மங்கையின் தீராப்பசியாகிய யானைத்தீயையும் (பஸ்மக நோய்) நீக்கினாள். பின்னும் பல விசேட நிகழ்ச்சிகளைக் காவிரிப்பூம்பட்டினத்துள் நிகழ்த்திவிட்டு, அமுதசுரபிக்கு உரியவனாகிய புண்ணியராசனைக் கண்டு புத்தபீடிகையைத் தரிசிக்கச் செய்து, அவனுக்கு அவனது பழம்பிறப்பை உணர்த்தி நல்வழிப்படுத்தக் கருதினாள். அதனால், அவள் அறவணவடிகள், மாதவி, சுதமதி இவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு ஆகாய வழியே சென்று, சாவக நாட்டில் புண்ணிய ராசனது நகர்ப்புறத்து ஒரு சோலையை அடைந்து, அங்குள்ள ஒரு முனிவனை வணங்கி, "இந்நகரின் பெயர் யாது? இதனை ஆளும் மன்னவன் யாவன்?" என்று வினவினாள். அம்முனிவன், "இந்நகரின் பெயர் நாகபுரம் என்பது. இதனை ஆள்பவன் பூமிசந்திரன் மகனாகிய புண்ணியராசன். அவன் பிறந்த நாள் தொட்டு இந்நாட்டில் மழை வளம் பிழைத்ததில்லை. பூமியும் மரமும் பல பலன்களைச் சுரந்தளிக்கின்றன; உயிர்கள் நோயிகந்து சுகமாய் வாழ்கின்றன," என அவ்வரசன் பெருமை முதலியவற்றை அவளுக்கு விரித்துரைத்தனன். அவ்வமயம் புண்ணியராசன், தன் பெருந்தேவியோடு அச்சோலைக்குள் வந்து, ஆண்டுள்ள தருமசாவகர் என்னும் முனிபுங்கவரை வணங்கி, அறவுரை கேட்டு அங்கிருந்தவன், முனிவர் அருகிலிருந்த மணிமேகலையை நோக்கி, "ஈடுமெடுப்புமில்லாத இப்பேரழகினள், கையிற்பிச்சைப் பாத்திரமுடையவளாய் அறவுரை கேட்கின்றாள்; இவள் யார்?" என்று வினவினான். அதற்கு அருகே நின்ற சட்டை இட்ட பிரதானி அரசனை வணங்கி, "இந்நாவலந்தீவில் இந்நங்கையை ஒப்பார் ஒருவருமிலர். முன்னொரு காலத்தில் கிள்ளி

வளவனோடு நட்புச்செய்யக் கருதி, நான் காவிரிப்பூம்பட்டினம் சென்றிருந்த காலத்து அங்கேயுள்ள அறவணவடிகள் என்பார், இவள் வரலாற்றை விளங்கக்கூறினாரென்று முன்னே உரைத்திருந்தேனல்லவா? அவளே இவள்," என்று கூறினான். கூறலும், மணிமேகலை அரசனை நோக்கி, "அரசே, உன் கையிலிருந்த பிச்சைப் பாத்திரமே இது; இப்போது என் கையிற் புகுந்தது; செல்வக்களியால் தெரியாது மயங்கினை போலும்! சென்ற பிறப்பையும் நீ அறிந்திலை; என் செய்தனை! மணிபல்லவஞ் சென்று புத்த பீடிகையை வலங்கொண்டு தொழுதாலன்றி உனது பழம்பிறப்பின் செய்தியை அறியாய்; ஆதலால், அரசே, அங்கே விரைந்து வருவாயாக," என்று சொல்லிவிட்டுத் தான் எழுந்து ஆகாயவழியே சென்று, சூரியன் மறைதற்கு முன்னர் மணிபல்லவத்தில் இறங்கிப் புத்த பீடிகையை வலங்கொண்டு தொழுதாள். அது வழக்கம் போல அவளது பழம்பிறப்பை அறிவித்தது. அவள் அதனை வியந்து அங்கே தங்கியிருந்தனள்.

புண்ணியராசன், மணிமேகலை கூறிய செய்தியைக்கேட்ட அளவில் மிக வியப்புற்று, இப்பிறப்பின் வரலாற்றையும் சென்ற பிறப்பின் வரலாற்றையும் அறியவேண்டுமென்ற ஆசை தூண்டுதலால், அச்சோலையினின்றும் விரைந்து புறப்பட்டு நகரையடைந்து, தன்னை வளர்த்த தாயாகிய அமரசுந்தரியைக் கண்டு, தனது பிறப்பு வரலாற்றை உரைக்கும்படி கேட்டான். அவள் அவன் வரலாறு முழுவதையும் கூறினாள். அரசன் அதனைக்கேட்டு வருத்தமுற்று, அரசாட்சியில் வெறுப்புக் கொண்டு, தான் துறவியாய் மணிபல்லவம் செல்வதற்குத் துணிந்து, தன் கருத்தை வெளியிட்டான். அதனைக்கேட்ட சனமித்திரன் என்னும் மந்திரி, புண்ணியராசனை வணங்கி, "அரசரே, வாழ்க! என் சொற்களைக் கேட்டருளவேண்டும்: உம்மை நம் அரசர் பெறுவதற்கு முன்னர் இந்நாட்டில் பன்னிரண்டு வருடம் மழை பெய்யாமையால் வறுமை மிகுந்தது; உயிர்களெல்லாம் பசியால்வருந்தின; அக்காலத்தில் நீர் கோடைகாலத்தில் மழை தோன்றினாற்போலத் தோன்றினீர். அங்ஙனம் நீர் தோன்றியபின் இந்நாட்டில் எல்லா வளங்களும் நிரம்பின; உயிர்கள் பசித்துன்பமுதலான துன்பங்களில்லாமல் வாழ்வனவாயின; நீர் இச்சமயம் இந்நாட்டை விட்டு நீங்குவீராயின்,

எல்லா உயிர்களும் தாயைப்பிரிந்த குழந்தைகள் போலக் கூவி அழாநிற்கும்; இத்தன்மையுடைய இவ்வுலகத்தை நீர்காவாமல், உமது நலத்தையே கருதிச் செல்லுதல் தகுதியன்று; எந்த நன்மையும் தன்னுயிர்க்கென்று நினையாது பிற உயிர்களுக்கே என்று கருதி உழைக்கும் புத்த தேவனது அறம் இஃதல்லவே!" என்று கூறினன். அரசன் அது கேட்டு, "மணிபல்லவத்தை வலங் கொண்டு வணங்க வேண்டுமென்று என்னுள்ளத்தில் எழுந்த வரம்பு கடந்த ஆசையைத் தணித்தல் அரிது; ஆதலால், நான் அங்குச் சென்று வருவேன்; யான் வருவதற்குப் பிடிக்கும் ஒரு மாத காலம் வரை இந்நகரைப் பாதுகாப்பது உமது கடமை யாகும்," என்று மந்திரியை நோக்கிக் கூறிவிட்டுப் புறப்பட்டு, வழிக்கொண்டு கடற்கரையை அடைந்து, மரக்கலமேறி மணி பல்லவத்தை அடைந்தான். உடனே மணிமேகலை எதிர் வந்து அழைத்துச்சென்று, அவனோடு அத்தீவை வலமாகச்சுற்றிப் புத்தபீடிகை அருகில் வந்து, "பழம்பிறப்பை அறிவிக்கும் தரும பீடிகை இது," என்று காட்டினள்; அவ்வளவில் அரசன் அதனைத் தரிசித்து அன்போடு வலங்கொண்டு துதித்தான். துதிக்கவே, அப்பீடிகை அவனுக்கும் பழம்பிறப்பின் செய்தியை நன்றாகத் தெரிவித்தது. அவன் அதனைத் தெரிந்து வியப் படைந்து, தனக்கு முற்பிறப்பில் ஒரு நாள் இரவில் அமுதசுரபி என்னும் அக்ஷயபாத்திரத்தை அளித்த சிந்தா தேவியைச் சிந்தித்து,

'அமுத சுரபி யங்கையில் தந்தென்
பவம்அறு வித்த வானோர் பாவாய்!
நாமாசு கழூவும் நலங்கிளர் திருந்தடி
பிறந்த பிறவிகள் பேணுத லல்லது
மறந்து வாழேன் மடந்தை!'

என்று துதித்தான். பின்னர் அவன், மணிமேகலையுடன் எழுந்து தென்மேற்குத் திசையிற்சென்று, கோமுகிப் பொய் கைக் கரையில் ஒரு புன்னை மரத்து நிழலிலே இருந்தான். இருக் குங்கால், அவர்கள் வருகையை அறிந்த அத்தீவின் காவல் தெய் வமாகிய தீவதிலகை, அங்கு வந்து அவர்களைக் கண்டு, புண்ணி யராசனை நோக்கிச் சில சொல்லத்தொடங்கி, "அக்காலத்தில்

இத்தீவில் உன்னை மறந்து தனியே விட்டுவிட்டு மரக்கலம் ஏறிச்சென்ற ஒன்பது செட்டிகள், பின்பு உன்னைக் காணாது வருந்தி இத்தீவிற்கு மீண்டு வந்து, உன்னைத் தேடி, நீ இறந்து போன வரலாற்றைத் தெரிந்து, தாங்களும் உடனே உண்ணா விரதம் பூண்டு உயிர் துறந்தார்கள்; அவர்களுடைய உடல் எலும்புகள் இவை; காண்பாயாக; அச்செட்டிகளது உபகாரத்தைப் பெற்று உடன் வந்தார் சிலர், அவர்கள் இறந்தது தெரிந்து பிரிவாற்ருது தாங்களும் உயிர் துறந்தார்கள். அவர்களுடைய உடல் எலும்புகள் இவை; காண். உனக்கு அரச பதவியை அளித்த அன்பு மயமான உனது பழைய உடம்பின் என்பு இப்புன்னை மரநிழலில் அலைகள் குவித்த மணலால் மூடப்பட்டிருப்பதையும் பார்ப்பாயாக; இங்ஙனம் உன்னுயிரையும் உனக்கிரங்கிய பிற உயிர்களையும் கொன்ற கொலைஞனாகிய நீயன்றோ, இப்போது சாவகநாட்டுப் புண்ணியராசனாய் விளங்குகின்றாய்! இஃது என்ன விந்தை!" என்று அவனைப் பழிப்பவள் போலப் புகழ்ந்து கூறினாள். அரசன், மணலைத் தோண்டித் தன்னுடைய பழைய உடம்பின் என்புகளைக்கண்டு ஆச்சரியமும் துக்கமும் கொண்டு மயங்கி நின்றான்.

புண்ணியராசனை நோக்கி இச்செய்திகளை உரைத்த தீவதிலகை, பின்பு மணிமேகலையை அன்புடன் நோக்கிக் கூறத் தொடங்கி, "மணிமேகலாய், உங்கள் நகரத்து அரசன் கிள்ளி வளவன், ஆண்டுதோறும் நடத்தும் இந்திர விழாவைச் செய்யாது மறந்தபடியால், மணிமேகலா தெய்வத்தின் சாபப்படி காவிரிப் பூம்பட்டினத்தை இப்போது கடல் கொண்டது; அரசன் முதலாயினோர் வேறிடம் சென்றனர்; அறவணவடிகளோடு உன் தாய் மாதவியும், தோழி சுதமதியும் யாதொரு வருத்தமுமின்றிச் சேரனது நகரமாகிய வஞ்சிமாநகரம் புகுந்தனர்; இனி நீ அவ்வஞ்சிமாநகரம் செல்வாயாக," என்று சொல்லிப் போய்விட்டாள்.

மணிமேகலை வஞ்சிமாநகரம் செல்லக் கருதியவள், பழைய உடம்பின் எலும்பைக் கண்டு மயங்கிய சாவகநாட்டரசனுக்குச் சிறந்த அறநெறியை எடுத்துரைத்து, அவனை அவனது நகரத்துக்குச் செல்லும்படி சொல்லிவிட்டுத் தான் ஆகாய கமன மந்தி

ரத்தை உருவிட்டு மேலெழும்பி, வஞ்சிமாநகரம் புகுந்தாள். புண்ணியராசன் மரக்கலமேறிச் சாவக நாடு (Java Island) சேர்ந்து, தன்னகரம் புகுந்தான். அவன் பின்னர்ப் பழம்பிறப்பின் நிகழ்ச்சிகளை எல்லாம் எண்ணி எண்ணி, மணிமேகலையின் உபதேசப்படி துறவறம் புகுந்து முத்தி அடைந்தான்.

வஞ்சிமாநகர் புகுந்த மணிமேகலை, பல சமய வாதிகளைக் கண்டு உரையாடி அவர்களுடைய கொள்கைகளையெல்லாம் உணர்ந்துகொண்டாள். பின்னர் மணிமேகலை தன் தாய் மாதவியும் அறவணவடிகளும் காஞ்சிமா நகருக்குச் சென்றுவிட்டனர் என்பதைக் கேள்வியுற்று, அங்குச்சென்று, அறவணவடிகளைக் கண்டு தனக்குப் புத்த தர்மத்தை உபதேசிக்க வேண்ட, அவர் அங்ஙனமேயுபதேசித்து, "மனத்திருள் நீங்கும்," என்று கூறி, ஞானதீபத்தை நன்கு காட்டினர். மணிமேகலை, "பிறவித்துன்பம் ஒழிவதாக!" என்று அந்நகரிலேயே நோற்றுக்கொண்டிருந்தாள்.

## 11. பூகம்பம்

[P. T. செல்லப்பா, B. A., M. SC.]

இயற்கையின் எழிலைக் கண்டு களிக்காத மனிதனில்லை; புகழ்ந்து பாடாத புலவனில்லை; அழகொழுக எழுதாத ஓவியனில்லை. இயற்கையோடு இணைந்த மானிட வாழ்க்கையே சாலச் சிறந்ததெனஅறிஞர் கூறுவர். இத்தகைய இன்பமும், எழிலும், விந்தையும் நிறைந்து விளங்கும் இயற்கையில் தோன்றும் பூகம்பம், எரிமலைகள், பேய்க்காற்று, பெருவெள்ளம் முதலிய கொடிய நிகழ்ச்சிகளை நினைத்தாலே உள்ளம் நடுக்குறும். இவ்வியற்கை இன்னல்களைக் களைவதில் இதுகாறும் மனிதன் வெற்றியடையவில்லை.

பீகாரில் 1934ல் பெரிய பூகம்பம் ஏற்பட்டது. மூன்று நிமிஷங்களில் பல நகரங்கள் அழிந்தன; பல்லாயிரக்கணக்கான மக்கள் மாண்டார்கள். அடுத்த ஆண்டில் குவெட்டாவில் பெரும்பூகம்பம் இரவில் ஏற்பட்டதனால், சுமார் 35,000 மக்கள் மாண்டு போனார்கள். 1950-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி இரவு 7-40 மணிக்கு அஸ்ஸாம் மாகாணத்தில் பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டது. இந்நில நடுக்கம் இது